Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

15 NOV 1971 UNDERGRADUATE LIBRARY COLLEGE

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

[illegible] 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 15
இதழ் 273

சாதாரண ஐப்பசி 27 றமழான் 24 சனிக்கிழமை (13-11-71)

உங்களுக்குத் தேவையான
இலங்கையில் தயாரிக்கப்பெற்ற
மட்பாண்ட
மலசலகூட
பாவனைப் பொருட்களை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

'பட்ஜட்' மறுபரிசிலனை

# மாவின் விலை அதிகரிக்காது! பாண்றாத்தல் 34 சதம்தான்!!

## கூப்பனுக்கு சீனி மாதம் 3 றாத்தல்: அமைச்சரவை முடிவு

கொழும்பு, வெள்ளி

**மாவின் விலை அதிகரிக்கப்படமாட்டாது. ஒரு றாத்தல் பாணின் விலை 34 சதமாகவே இருக்கும்.**

அவசரமவசரமாக இன்று காலை கூடிய மந்திரிசபை இந்த முடிவை எடுத்தது.

பங்கீட்டுச்சீட்டுக் கூப்பன் எடுத்திருக்கிறது. ஒன்றுக்கு வாரத்துக்கு முக்கால் றாத்தல் சீனி வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க ஆட்சிமன்ற நிதிக்குழு மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து அமைச்சரவை இப்படியான தீர்மானத்தை

மாவின் விலையை 15 சதத்தினால் அதிகரிப்பது என்ற நிதி அமைச்சரின் வரவு செலவு திட்ட பிரேரணையை இப்போது அமுல் நடத்துவதில்லை என்று அமைச்சரவை தீர்மானித்தது. ஒரு றாத்தல் மாவின் விலை 33 சதமாகவே இருக்கும்.

சீனி தொடர்பான வரவு செலவுத் திட்ட பிரேரணையை அமைச்சரவை மறுபரிசீலனை செய்தது.

வாரமொன்று முக்கால் றாத்தல் சீனியை பங்கீட்டில் கூப்பன்ஒன்றுக்கு வழங்குவதென்று அமைச்சரவை

(6-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, சனி. நேற்று அம்பலாங்கொடையில் இழுக்கப்பட்ட 370-வது தேசிய சுவீப்முடிவு விபரம் வருமாறு:

1வது பரிசு
14 O 0593 ரூ 94,050

2வது பரிசு
27 M 0356 ரூ. 37,620

3வது பரிசு
06 Z 0178 ரூ 9,405

தலா ரூபா 470-25 சதம் ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 24 A 0981 | 21 A 0273 |
| 40 A 0787 | 4 A 084 |
| 29 A 0436 | 23 A 0665 |
| 22 A 0475 | 14 B 0462 |
| 24 B 0039 | 25 B 0833 |
| 15 B 0616 | 33 B 0115 |
| 25 B 0032 | 35 C 0785 |
| 40 C 0605 | 08 C 0424 |
| 17 D 0758 | 08 D 0303 |
| 13 E 0837 | 06 E 0317 |
| 01 E 0912 | 26 E 0138 |
| 36 E 0147 | 32 E 01.3 |

| | |
|---|---|
| 05 E 0926 | 38 F 0498 |
| 20 F 0290 | 40 F 0195 |
| 28 G 0020 | 39 G 0840 |
| 07 H 0188 | 31 H 0315 |
| 13 H 0605 | 27 H 0277 |
| 33 H 0441 | 10 H 0950 |
| 01 J 0172 | 35 J 0037 |
| 34 J 0459 | 13 J 0537 |
| 15 J 0807 | 21 J 0210 |
| 09 J 0064 | 30 J 0956 |
| 18 J 727 | 30 J 0926 |
| 09 K 0577 | 16 K 0037 |
| 30 L 0629 | 35 L 0334 |
| 09 L 0129 | 26 L 0852 |
| 26 L 0800 | 23 M 0839 |
| 23 M 0843 | 29 M 0697 |
| 23 M 0828 | 26 M 0211 |
| 29 M 0145 | 25 M 0192 |
| 39 M 0172 | 28 M 0166 |
| 06 M 0289 | 38 M 0635 |
| 01 N 0011 | 33 O 0341 |
| 15 O 0901 | 18 O 0565 |
| 32 P 0846 | 10 P 0636 |
| 14 Q 0898 | 27 Q 0494 |
| 37 Q 0693 | 10 Q 0605 |
| 22 Q 0332 | 18 R 0431 |
| 32 R 0983 | 29 R 0021 |

(5ம் பக்கம் பார்க்க)

ஆஸ்பத்திரி வெளிநோயாளர்கள்

## 25 சத முத்திரை செலுத்தி சிகிச்சை பெறவேண்டும்

கொழும்பு, வெள்ளி

அரசாங்க வைத்திய நிலையங்களில் வெளிநோயாளர்களாக சிகிச்சை பெறுவதற்கு செல்வோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தடவையும் 25 சத முத்திரை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டியிருக்கும்.

வெளிநோயாளர்களாக சிகிச்சைபெறுவோர் 25 சதம் கட்டணம் செலுத்த வேண்டுமென வரவு செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் டாக்டர் பெரேரா தெரிவித்த யோசனைக்கு அமையவே இவ்வாறு செய்யப்படுகின்றது. இது அடுத்த திங்கட்கிழமை தொடக்கம் அமுலுக்கு வரும்.

ஆய்வுகூடங்கள் எக்ஸ்றே படப்பிடிப்பு, பல்பிடுங்கல் போன்ற சிகிச்சைகளுக்கு செல்வோரும் இந்தக்கட்டணம் செலுத்த வேண்டும். ஆனால் அவசர சிகிச்சைகளுக்குப் போவோர் முத்திரை சமர்ப்பிக்காவிடினும் சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென டாக்டர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆஸ்பத்திரிகளில் கட்டணம் செலுத்தி தங்கி சிகிச்சை பெறுவோர் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டும்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் தங்கி சிகிச்சைபெற

(5-ம் பக்கம் பார்க்க)

# மரவரிமுறை நீடிக்கப்பட வேண்டும்!

## நிதி அமைச்சரிடம் எம். ஸி. வற்புறுத்தினார்

யாழ்ப்பாணம், சனி

'யாழ் குடாநாட்டில் மரவரிமுறை நீடிக்கப்பட வேண்டும். இதனையே நான் நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவிடம் வற்புறுத்தினேன்' என்று நியமன எம். பி.யும் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைத்தலைவரும், வடபகுதி கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கப்பொதுச் செயலாளருமான திரு. எம். ஸி. சுப்பிரமணியம் கூறினார்.

யாழ் குடாநாட்டில் மரவரிமுறை அகற்றப்பட்டு, தவறணை முறை கொண்டு வரப்படவிருப்பதாக புதிய "பட்ஜட்"டில் அறிவிக்கப்பட்டது சம்பந்தமாக அவரிடம் கேட்டபோதே இப்படிக் கூறினார்.

'மரவரி முறையிலுள்ள ஊழல்களை ஒழிக்கவேண்டுமென்றுதான் யோசனை தெரிவித்தேன். கலால்பகுதியினருடைய காந்தக்கட்டிகளுக்குள் நுழையும் "சம்திங்" முறை ஒழிக்கப்பட வேண்டும். இவைகளையெல்லாம் நிதிஅமைச்சரிடம் தெரிவித்தேன்' அரசாங்க வருமானத்தில் ஒரு பகுதி கலால் பகுதியினரிடம் போய்விடுகின்ற தென்பதையும் சொன்னேன், என்று கூறிய எம். ஸி. மேலும் சொன்னார்.

மரவரி முறையை வைத்துக் கொண்டு, அதற்கான வரியை உயர்த்தலாம் என்றும் யோசனை தெரிவித்தேன். மூன்று மடங்காகக் கூட உயர்த்தியிருக்கலாம். பரீட்சார்த்தமாக கூட்டுறவு முறையில் தவறணைகளை [illegible] பகுதியில் நடாத்திப் பார்த்து விட்டு, அது வெற்றியளிக்கும் பட்சத்தில் இப்படியானதொரு திட்டத்தைக் கொண்டுவந்திருக்கலாம். 1935ம் ஆண்டிலிருந்து மரவரிமுறை இருந்து வருகிறது. இதனால் திடீரென ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவது உகந்ததல்ல. மக்களுக்கு அவகாசம் அளிக்க வேண்டும். இதன்பின்னரே படிப்படியாக மாற்றத்தைக் கொண்டுவரலாம் என்ற எனது கருத்தைக் கேட்டபோது என். எம். மிடம் சொன்னேன்.

சமூக ரீதியில் பார்த்தால் வடக்கில் 15 ஆயிரம் பேர் இத்தொழிலை நம்பி வாழ்கிறார்கள். 2,500 பேர் இந்த தொழிலை நேரடியாகச் செய்கிறார்கள். இவர்களுக்கு இந்த திடீர்மாற்றம் பாதிப்பைத் தான் ஏற்படுத்தும்.

அரசியல் ஆட்சிமன்ற குழுவிற்கும் தனது யோசனையைக் கூறியிருப்பதாகவும் எம் ஸி தெரிவித்தார்.

## வரி விளம்பரம்

லோரிடார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3709

அப்பளம் தயாரிப்புக்கேற்ற உழுந்துமா நவீன இயந்திரங்கள் மூலம் அனுபவமிக்க தொழிலாளர்களால் அரைத்து அரித்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்: முகமதி இரைண்டிங் மில்ஸ், 443, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 3675

மணிமாரிக் வரகு அரிசி குரக்கன்மா என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள். மோசடிகளை வாங்கி ஏமாறாதீர்கள். P. முத்தையா, வசந்தா இன்டஸ்றீஸ், நாவடிலேன், வண்-மேற்கு. யாழ்ப்பாணம். 3706

கலவித நவநாகரிகங்களும், கோழித்தீனி வகைகளும் மருந்துச்சரக்குவகைகளும். வெவ்வேறு யந்திரங்கள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மனோன்மணி மில்ஸ், 46/1 பிரவுண் ரோட், யாழ்ப்பாணம். 3694

### விற்பனைக்கு

கிரிமலையில் கேணிக்கு 1/4 மைலுக்குள் காங்கேசன்துறை ரோட்டுக்கு கடற்கரைப் பக்கமாக ஒரு சிறுவீடும் 27 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. வாங்குவோரின் வசதிக்கேற்ப காணி பிரித்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: வே. நாகநாதன் ஆர்திபடி, பருத்தித்துறை. 3731

மருந்துகள். மருந்துச் சரக்குகள் சித்த ஆயுர்வேத ஆங்கில மருந்துச் சரக்குகள் சிறந்த முறையில் மலிவாகக் கிடைக்கும்: எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு கொழும்பு. 3708

### விற்பனைக்கு

7 வால்வ் [Valves] மெயின் (Main Set) றேடியோ செற் விற்பனைக்குண்டு. 192, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை. 3736

குடத்தனையில் 7 1/2 ஏக்கர் தென்னந்தோட்டமும் குஞ்சப்பரந்தனில் 6 ஏக்கர் இருபோக நெல்வயலும். வடமராட்சி புத்தகசாலை, பருத்தித்துறை. 3732

### கன்னாகம் பட்டணசபை
### 1972
### கேள்வி விளம்பரம்

1972-ம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடுவனவற்றிற்கான சீல் வைத்த கேள்விகள் 24-11-71 முற்பகல் 10-30 வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். ஏனைய விபரங்கள் பட்டணசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. கன்னாகம் பட்டணத்தில் ஆட்டிறைச்சி விற்பனைசெய்யும் உரிமைக்கான கேள்வி.
2. சுன்னாகம் மீன் சந்தையில் உலர் கடதாசி உறை விற்பனைசெய்யும் உரிமைக்கான கேள்வி.
3. ஆலடிச்சந்தை குத்தகைக் கேள்வி.

பொ. நாகலிங்கம்
தலைவர்
பட்டணசபை,
சுன்னாகம். 3134

V-ம் வகுப்பு N P. T. A. பரீட்சைக்கு ஒரு வாரம் மட்டுமே உண்டு. திருப்புதற் பயிற்சிக்கு ஏற்ற வினாப் பத்திரங்கள் ஒவ்வொன்றும் 60 சதம் மட்டுமே. வே. க. கந்தசாமி (புதுமைலோலன்) எழுதியவை. சூழல் - கணிதம் - ஆங்கிலம் - தமிழ் - இந்துசமயம் பாடத்துக்கும் தனித்தனி நூல்கள். ஒவ்வொரு மாணவரும் பயிற்சி பெற்றுக்கொள். 1-ம் பிரிவுச் சித்தி நிச்சயம்

எல்லாப்புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

### பிரியாவிடை

காரைநகர். வெள்ளி
எழுவைதீவு ஸ்ரீ முருகமூர்த்தி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி, காரைநகருக்கு இடமாற்றஞ்செய்யப்பட்ட தலைமை ஆசிரியர் திரு. வி. சிவசுப்பிரமணியத்திற்குப் பெற்றோரும் மாணவரும் பிரியாவிடை விருந்தளித்துக் கௌரவித்தனர்.

### இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், சனி
கொழும்பு "சேப்பிறிச்" உதைபந்தாட்டக் கழகமும், யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டியும் இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் மோதுகின்றன.

இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இப் போட்டியின் முதல் ஆட்டத்தில், யாழ்ப்பாணம் "றிதீஸ்பீக்ட்" விளையாட்டுக் கழகமும், தெல்லிப்பளை 'றிஜுன் கோஸ்மஸ்' விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.
(தே நி)

2-வது உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

# யாழ். அனுராதபுரம் நாளை மோதுகின்றன

யாழ்ப்பாணம், சனி
யாழ். உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியும், அநுராதபுரம் உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியும் நாளை மீண்டும் 2-வது சுற்றுப் போட்டியில் மோதுகின்றன. இப்போட்டி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ். உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டிக்கு வீரர் எம். வடிவேலீஸ்வரன் தலைமைதாங்குகின்றார்.

யாழ் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் மற்றைய வீரர்கள் விபரம்:

எம். வடிவேலீஸ்வரன் (காப்டன்), எம். பி. சோமேந்திரன் (உப-காப்டன்), எஸ். அன்ரனி, ஏ. இளறன்ஸ், எம். பிரான்சிஸ், டபிள்யு விமலதாஸ், எஸ். டி. குலநாதன், எஸ். தேமலஸ், டி. பி. எஸ். இராசையா, ஏ. எம். சொன்ஸலஸ், ரீ. மரியதாசன், எஸ். அந்தோனிப்பிள்ளை, செல்வச்சந்திரன், எல். ஜி. போல், எஸ். ஜெயலிங்கம், பி. நவப்பிரகாச, ஏ. அகலின்.

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினால், மாவட்டத் தெரிவுக் கோஷ்டிகளிடையே வருடாந்தம் நடாத்தப்படும் உதைபந்தாட்ட "நொக்அவுட்" போட்டியில் மேற்படி இரு கோஷ்டிகளும் மோதுகின்றன.

யாழ். கோஷ்டிக்கும் அநுராதபுரம் கோஷ்டிக்குமிடையில் கடந்த வாரம் அநுராதபுரத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது குறிப்பிடத்தக்கது.

மேற்படிப் போட்டியில் கலந்து கொள்வதற்காக அநுராதபுரக் கோஷ்டி இன்று இரவு யாழ். நகர் வருகின்றது. (தே நி)

### சாரணர் சங்க குருவேயர் விழா

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாண மாவட்ட சாரணர்சங்க வருடாந்தக் குருவேயர்விழா இம்மாதம் 14-ம் திகதி யாழ்ப்பாணக் கச்சேரி பழைய பூங்காவில் நடைபெறவிருக்கிறது. இவ் விழாவை யாழ். மாவட்ட ஆணையாளர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கிறார். வடமாநிலக் கல்வி அதிபதி திரு. டபிள்யு. டி. இ. மகாதத்தில பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

14—11—71
வாரமலரில்

கவைமிகு
புதிய அம்சங்கள்

★

★ போராடப் பிறந்தவர்கள்

"ஈழநாடு" நடத்திய நாவல் போட்டியில் 1-வது பரிசு பெற்ற செங்கை ஆழியானின் சுவைமிகு நாவல்

★

★ யோகத்தின் யோகம்

ஒரு பெண்ணின் நிறைவேறு ஆசையை சித்தரிக்கும் நெல்லை. க. பேரனின் சிறுகதை

★

★ 'ஜீவபூமி'

அ. செ. மு. அழைத்துச் செல்லுகிறார் கார்த்திகைத் தீபத்துக்கு.

★

★ நம்பலாம்; நடந்தது!

அமைச்சர் திருச்செல்வம் பேசியபோது கூச்சல் எழுந்தது ஏன்? சுவையுடன் எழுதுகிறார் —'யோகி'

★

இவற்றுடன்
சசிபாரதியின்
குட்டிக்கதை, குடும்பச் சுடர், மாணவர் மலர், கலைமரங்கள் போன்ற வழமையான அம்சங்களும் வேறுபல சுவையான அம்சங்களும் இடம்பெறுகின்றன.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, பத்மினி, பானுமதி, வைஜயந்திமாலா, நம்பியார் நடித்த
# ராஜபக்தி
[புதியகொப்பி]

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30
ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த
# நூற்றுக்கு நூறு
தினசரி 10-30, 10-00
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
# என் தம்பி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார்ஜானகி - ரவிச்சந்திரன்
(முதல் வேடங்களில்)
நடித்த
# காவியத்தலைவி

4-வது வெற்றிவாரம்
லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
# ஆராதனை
(ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)
ராஜேஷ்கன்னா ★ ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார் ★ பரீடா ஜலால்
நடித்தது.

2-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்.



★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ நாகேஷ்
★ அசோகன்
★ ஷீலா
நடித்த
# மூன்றெழுத்து
(ஈஸ்ட்மன் கலர்)

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி 4-30
சனி ஞாயிறு 10-30
FALSE SHAME
தினசரி, 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
வாழ்க்கைப்படகு

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி— சாவித்திரி
பாசமலர்

சாந்தி சினிமா
(சங்கானை)
சனி: காலை 415
DUFFY
மாலை, 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30 மற்றினி
சிவாஜி—பத்மினி
நடித்த
இருமலர் பெருமை

MANOHARA
Jaffna
Daily 4-45 700- & 9-45
Sat, Sundays 10-30.
Tony Tenser's
LOVE IN OUR TIME
(Eastman Color)
(adults only)

REGAL Jaffna
Daily 5-15 7-15 p.m.
Sat-Sundays 10-30 a.m.
Bill Travers
Virginia McKenna
in
AN ELEPHANT CALLED SLOWLY
தினசரி பி. ப 2-00, 10-00
சிவாஜி-தேவிகா; நாகேஷ்
நடித்த
அன்புக்கரங்கள்
(புதிய கொப்பி)

அமெரிக்காவின்

# வெளிநாட்டு இராணுவ கடன் உதவிக்கும்

# செனட் அங்கீகாரம்

## ஆனல் உதவித்தொகை குறைப்பு

வாஷிங்டன், நவ 12

அமெரிக்க அரசின் வெளிநாடுகளுக்கான ராணுவ கடனுதவிக்கான அனுமதியை செனட் அங்கீகரித்துள்ளது.

இரு வாரங்களுக்கு முன் நிக்சன் நிர்வாகத்தினுல் சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாடுகளுக்கான உதவித்தொகை அனுமதிக் கோரிக்கையை செனட்சபை நிராகரித்திருந்தது. இதையடுத்து மனிதாபிமானங்கள் பற்றிய விஷயங்களுக்கு மட்டும் முதலில் செனட் அனுமதி வழங்கியது. இப்பொழுது இரண்டாவது பகுதியாக வெளிநாடுகளுக்கான ராணுவ செலவினங்களை செனட் அங்கீகரித்துள்ளது. ஆனல் நிக்ஸன் நிர்வாகத்தினுல் சமர்ப்பிக்கப்பட்ட தொகையைவிட இதுவிகவும் குறைவாகும். நடப்பாண்டில் 150 கோடி டாலருக்கு மட்டுமே செனட் இப்பொழுது அனுமதித்துள்ளது.

தென்கிழக்காசியாவிலிருந்து ஆறு மாதத்துக்குள் அமெரிக்கப்படைகள் வாபஸ் பெறப்படவேண்டுமென்று செனட்டில் பேசிய ஜனநாயகக்கட்சி செனட்டர் வலியுறுத்தினர்.

அமெரிக்கா வெளிநாட்டு ராணுவச்செலவினங்களுக்கு இத்தொகை போதியதல்ல என்று வெள்ளைமாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இனி இம்மசோதா அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் அனுமதிபெறவேண்டும்.

அமெரிக்க அரசாங்கம் 2130 கோடி டாலர் பெறுமதிக்கு ராணுவ சாதனங்களைப் பெறுவதற்கான இன்னேர் மசோதாவையு செனட் அங்கீகரித்துள்ளது.

### டாக்கா

## கடையில் குண்டுவெடித்தது

### 3 பேர் பலி

டாக்கா, நவ 12

டாக்காவின் ஆடம்பரக் கடைத்தெருவிலுள்ள கடை ஒன்றில் குண்டுவெடித்ததில் மூவர் பலியாயினர். 40-க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

கடையில் குண்டு வெடித்ததை அடுத்து இப்பகுதியிலுள்ள கடைகள் யாவும் மூடப்பட்டன. இராணுவம் இப்பகுதியில் காவல்காத்து வருகிறது.

### மக்கள் சந்தைக் கட்டிடம்

காரைநகர்த்துறை. ஞாயிறு

புங்குடுதீவுக் கிராமசபை மக்கள்சந்தைக் கட்டிடம் அமைக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன; கிராமசபைக் காரியாலயத்திற்கு அண்மையில் சந்தைக் கட்டிடம் கட்டப்படுகிறது.

## "மனித முன்னேற்றத்துக்கு சீன உழைக்கும்"

நியூயோர்க் நவ. 12

ஐக்கியநாடுகள் சபைக்கான சீனமக்கள் குடியரசின் தூதுக்குழு நியூயோர்க்வந்து சேர்ந்தது. உதவி வெளிநாட்டு அமைச்சர் தலைமையில் வந்த இக்குழுவில் ஐநாவுக்கான சீன மக்கள் குடியரசின் நிரந்தரப் பிரதிநிதி உட்பட 40-க்கு மேற்பட்ட இராஜதந்திரிகள் அங்கம் வகிக்கின்றனர்.

உதவி வெளிநாட்டமைச்சர் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் ஐநாவிலுள்ள மக்கள் உயர்ந்தவர்களே, உலக மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக சீன என்றும் உழைத்துவரும் என்ருர்.

### வரட்சிக்கேற்ற நெல் இனங்கள்

சங்கானை, வெள்ளி

மூன்றரை நாலரை மாதங்களில் விளைவைக் கொடுக்கக்கூடிய நெல் இனங்கள் வரட்சி கூடிய வடபகுதியில் பரீட்சார்த்தமாக விதைக்கப்பட்டுள்ளன. வலிகாமம் மேற்குப்பகுதியில் பதின்மூன்று இடங்களில் சங்கானை விவசாய விசாலிப்பு பகுதியினர் துண்டங்களாக சோதனைக்கு விதைத்துள்ளனர்.

### ஆனந்தபவனம் மக்களுக்கு திறக்கப்படும்

புதுடில்லி, நவ.12

ஆனந்தபவனம் ஞாயிற்றுக்கிழமையன்று பொதுமக்களுக்காகத் திறந்துவிடப்படவிருக்கிறது. காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 82வது பிறந்ததினம் கொண்டாடப்படுவதை ஒட்டி இவ்வேற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இல்லத்தை குழந்தைகளே திறந்து வைத்து, நேருவின் 82 வது பிறந்ததினத்தைக் குறிக்கும் வகையில் 82 ரோசாச் செடிகளை நடுவர். காலஞ்சென்ற பிரதமர் நேரு குழந்தைகள் மீது அன்பு கொண்டவர் என்பதும் அவரது பிறந்ததினங்களின் போது குழந்தைகளுடன் அவர் விளையாடி மகிழ்வதும் உலகம் அறிந்த விஷயம்.

நேருவின் குடும்பச் சொத்தான ஆனந்தபவனத்தை அவரது மகளும், இந்தியப் பிரதமருமான திருமதி இந்திரா காந்தி நேரு நினைவு நிதிக்கு இவ்வில்லத்தை அன்பளிப்புச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பூட்டோ மீது துப்பாக்கி பிரயோகம்

## மயிரிழையில் உயிர்தப்பினுர்

கராச்சி, நவ 12

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவரும் முன்னள் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சருமான திரு. சுல்பிகார் அலிபூட்டோ மயிரிழையில் உயிர்தப்பினுர்.

திரு. பூட்டோ லாகூரிலுள்ள மண்டபத்தியசாலை ஒன்றில் நுழையும்பொழுது கைத்துப்பாக்கியினுல் அவர் மீது பலமுறை சுடப்பட்டதாகவும் ஆனல் அவர் எவ்வித ஆபத்துமின்றி உயிர் தப்பியதாகவும் செய்திகள் தெரிவித்தன.

அவரைச் சுட்டவர்கள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

### இந்தியா - பாகிஸ்தான்

# எல்லைக் குமுறலை நிறுத்த அமெரிக்கா வற்புறுத்து

## இரு நாட்டுத் தூதர்களை சிஸ்கோ சந்தித்தார்

வாஷிங்டன் நவ. 12

அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் திரு. சிஸ்கோ அமெரிக்காவிலுள்ள பாகிஸ்தான் தூதுவரையும், இந்தியத் தூதுவரையும் தனித்தனியாகச் சந்தித்து இருநாடுகளுக்குமிடையேயுள்ள பதட்டநிலையைத் தவிர்க்குமாறு வலியுறுத்தியதாக அமெரிக்க இராஜாங்க வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் அடிக்கடி நடந்துவரும் சம்பவங்களினுல் இருநாடுகளுக்குமிடையே போர் மூண்டுவிடும் என்பதாலேயே தொடர்ந்தும் இவ்விரு நாடுகளும் இவ்வித செயல்களில் ஈடுபடுவதை அமெரிக்கா விரும்பவில்லை என்று இவர்களிடம் திரு சிஸ்கோ வலியுறுத்தினராம்.

# மேற்காசியப் பிரச்னை 1971 க்குள் தீரவேண்டும்

—சதாத்

கெய்ரோ நவம்பர் 12

இந்த வருடத்துக்குள் மேற்காசியப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்று எகிப்து ஜனுதிபதி திரு அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்.

எகிப்தின் மக்கள் சபையில் உரையாற்றியபொழுதே ஜனுதிபதி சதாத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. சதாத் மேலும் பேசுகையில் இஸ்ரேல் நிலைதொடு உடன்பாட்டை மதிக்க அவிக்கவேண்டும். இஸ்ரேலியரால் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களிலிருந்து விலகிச் செல்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை அவர்கள் எடுத்தால்தான் மேற்காசியப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பது பற்றி இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தை நடத்தமுடியும். அதுவரை சூயஸ்கால்வாயைத் திறப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை என்ருர்.

### இஸ்ரேல் குற்றச்சாட்டு

இஸ்ரேல் சமுத்திரத்தின்மீது எகிப்திய குண்டு விமானங்கள் பறந்ததாக ஐநா தலைமை நிலையத்தில் இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது. இந்த விமானங்கள் சோவியத் யூனியனும் எகிப்துக்குக் கொடுக்கப்பட்ட "மிக் 23" ரக போர்விமானங்கள் என்றும் அந்தக் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க புதிய கல்வித் திட்டம்!

## யாழ். கல்வி அதிகாரி விளக்கம்

புலோலி, வெள்ளி

"தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனேயே கல்வியைபற்றி மறுபரிசீலனை செய்தது. 50 கோடி ரூபாய் கல்விக்காக அரசாங்கம் ஒதுக்கியது வருங்காலத்தில் நல்ல முறையில் கல்வியை இந்த நாட்டில் முன்னேற்ற தற்போது சீரமைக்கப்பட்ட இந்த திட்டத்தை ஏற்படுத்தியது. அடுத்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரவிருக்கும் புதிய கல்வித் திட்டம் எண்ணியபடி வெற்றி பெறுவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் இது சம்பந்தமாகத் தொகுதிதோறும் தீவிர பிரசாரம் செய்யுமாறும் கல்வி அமைச்சு எங்களுக்கு உத்தரவிட்டுள்ளது" என்று யாழ்ப்பாண பிரதம கல்வியதிகாரி திரு. அ. சந்திரசேகரம்பிள்ளை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் 14 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக கட்டிய வகுப்பறைகளை திறந்து வைத்து பேசுகையில் தெரிவித்தார்.

### ஒத்துழைப்பு வேண்டும்

கல்வி அபிவிருத்தித் திட்டம் எமக்கிடையே விளக்கும் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாகும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இருக்கும் அரசியல் வேறுபாடுகளை மறந்து நடைமுறைக்கு வரவிருக்கும் புதிய கல்வித் திட்டத்துக்கு ஒவ்வொருவரதும் பரிபூரண ஒத்துழைப்பையையும் ஆதரவையும் தருமாறு கேட்டுக் கொண்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "உத்தேச கல்வித்துறை சீரமைப்பின் அடுத்த வருடம் தொடக்கம் 6ம் வகுப்பில் இருந்தே தரத்தை பிரிக்க ஏற்பாடு செய்து இருக்கிறது. கல்வியமைச்சு எல்லா மாணவர்களும் எல்லா பாடங்களும் கற்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது. இந்த கல்வித்துறை சீரமைப்பின் நகரப்புறபாடசாலைகளுக்கும் கிராமப்புற பாடசாலைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் அகற்றப்படுமென்று கூறினுர்.

### தொழில்

"சகல மாணவர்களும் தொழில் பயிற்சி பகுதியை கட்டாயமாக ஒரு பாடமாக கற்கவேண்டும். விவசாயம் கைத்தொழில் ஆகிய துறைகளிலும் தம்பு வேலையும் கட்டாயமாக போதிக்கப்படும். இத்துறைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கலாம்" என்றும் அவர் சொன்னுர்.

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு புகையிலைபயிற்சியும் ஒர் பாடமாக அமைய இருக்கிறது. சகலபாடசாலைகளிலும் போதிய வசதி இருந்தால்தான் அடுத்த வருடம் 6-ம் வகுப்பில் இருந்து தரம் பிரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் வசதி இல்லாத பாடசாலைகளில் தரம்பிரிக்கப்படமாட்டாது' என்றும் அவர் தெரிவித்தார்.

### பல்கலைக்கழகம்

அமுல்நடத்தப்படவிருக்கும் புதிய கல்வித்திட்ட மாற்றத்திற்கு ஏற்றதாகவே இலங்கையில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் புதிய உயர்கல்வித்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்துடனும் இணைப்புக்கல்லூரிகளுடனும் தொழில்பயிற்சி தொழில்நுட்ப தொழிற்கல்விகளும் கற்பிக்கப்படுமென்றும் கூறினுர்.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கு இராசையா பேசுகையில், அடுத்த ஆண்டிலிருந்து வரவிருக்கும் கல்விமாற்றம் எங்கள் சமுதாயத்திற்கு ஏற்றதாக இருக்கும். படித்து உத்தியோகம் அற்ற பல்லாயிரக்கணக்கானேர் இருக்கிருர்கள். இந்த வளர்ச்சி மேலும் ஏற்படாது இருக்க அடுத்த ஜனவரி மாதத்திலிருந்து கல்வி அமைச்சு ஒரு திட்டம் வகுத்துள்ளது. கைத்தொழில் பாடப்படிப்பிற்காக புதிய பாடத்திட்டம் கல்வி அமைச்சினுல் அமைக்கப்பட்ட திட்டம்" என்ருர்.

பாடசாலை தலைமையாசிரியர் திரு ஆ க மாணிக்கம் வரவேற்புரைநிகழ்த்தினுர்.

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் மாவட்ட சலசமூக நிலைய சமாஜ கருத்தரங்கு அடுத்த மாதம் 5-ந் திகதி யாழ். நகர மண்டபத்தில் திரு. வே. சுப்பையா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

